பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 13 | திங்கட்கிழமை | 30.10.2023 | அதிர்வு 90

## சட்டவிரோத நடவடிக்கைக்கு இலங்கை ஆதரவளிக்காது!

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ திட்டவட்டம்

சட்டவிரோதமாக இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கு அனுமதி இல்லை என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு 06

# சஜித்தின் கட்சியிலிருந்து பலர் ஐ.தே.கவில் சங்கமிக்க முடிவாம்

## ரணிலே தொடர்ந்தும் ஜனாதிபதி என்கிறார் ஹரின்



“சஜித் பிரேமதாஸவால் நாட்டுக்கு எதுவும் செய்ய முடியாது. இதை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்துவிட்டார்கள். இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.”

- இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். 06

## சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் அரச ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்



- அஸ்ஹர் ஆதம் -

சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் அரச ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலிருந்து 06

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

### ஆனைக்கோட்டையில் சோகம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் உசாந்தன் (வயது 24) என்பவரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞர் கரம் சுண்டல் விற்பனை செய்யும் வண்டில் ஒன்றைத் தயாரித்து, அதற்கு மின்சார வேலைகள் செய்துவிட்டு, மின்சார இணைப்பை வழங்கியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. 06

## யாழில் தலையில் விறைப்பு ஏற்பட்டு மயங்கிய 10 வயது சிறுமி உயிரிழப்பு

- எஸ்.நிதர்ஷன் -

தலையில் விறைப்பு ஏற்பட்டு மயங்கி சரிந்த சிறுமி ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

தண்ணீர் தாங்கி வீதி, குருநகரைச் சேர்ந்த ஜேசுதாஸ் அனோஜினி (வயது 10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் தரம் 5இல் கல்வி கற்று வரும் குறித்த சிறுமி வீட்டில் இருந்தபோது கடந்த 21ஆம் திகதி 06




சீன ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகை, அக்கப்பலுடன் சேர்ந்து இலங்கைக் கடலில் ஆய்வுகளில் ஈடுபடும் இலங்கைத் தரப்பின் கடைசி நேர முடிவு, கடந்த ஒரு நாளில் மட்டும் 37 தமிழக மீனவர்களும் அவர்களது படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் மடக்கப்பட்டமை போன்ற விடயங்களால் பக்கத்து நாடு கொதித்துப் போயிருக்கும் நிலைமை.

இந்தச் சூழலில் பக்கத்து நாட்டின் 06



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04
No.30, Hotel Road, Mount Lavinia
No. 02, Glenfall Road, Nuwara Eliya
No.01, Havelock Place, Colombo 05
No. 34/2, De Saram Road, Mount Lavinia
No. 358, High Level Road, Nugegoda
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

# தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையின் நிர்வாகத்தில் மாற்றம்




தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாற்றம் எதிர்வரும் சில தினங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை, உரிய தரத்தைக் கொண்டிராத மருந்துகளின் பயன்பாடு, தரவுகள் அழிக்கப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மீது பல தரப்பினரும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

சுகாதாரத் துறையில் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருந்தமையின் பின்னணியிலேயே, வைத்தியர் ரமேஷ் பத்திரனவை புதிய சுகாதார அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார்.

சுகாதார அமைச்சராக செயற்பட்ட கெஹெலிய ரம்புக்வெல்ல சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்டு இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணுக்கு இருநாட்டு தேசியக் கொடிகள் போர்த்தி கௌரவம்

## இன்று களனியில் இறுதி நிகழ்வுகள்

ஹமாஸ் தாக்குதல்களினால் இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணான அனுலா ஜயதிலகவின் சடலம் நேற்று அவரது வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

இஸ்ரேலில் இருந்து விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட அவரது உடல், பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

களனி – ஈரியவந்த பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 49 வயதான ஜயதிலக இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

வீட்டிற்கு கொண்டுவரப்பட்டது அனுலாவின் உடல் – இருநாட்டு தேசியக் கொடிகள் போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இவர் கடந்த 2013ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கு செவிலியராகப் பணிக்குச் சென்றுள்ளார்.

சம்பவத்தின் போது, அனுலா ஜயதிலக காசா மற்றும் இஸ்ரேலின் எல்லைக்கு அருகில் உள்ள கிப்புட்ஸ் என்ற இடத்தில் பணிபுரிந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாய கிராமமாக இருந்த இந்த பகுதியில் கடந்த 7ஆம் திகதி எல்லையில் ஊடுருவிய ஹமாஸ் அமைப்பை சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தினர்.

அந்த தாக்குதலின் பின்னரே அனுலா ஜயதிலக காணாமல் போனார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், சில நாள்களின் பின்னர் அவர் இறந்துவிட்டார் என இஸ்ரேல் தூதரகம் அறிவித்தது.

உயிரிழந்த பெண்ணின் உடலை அடையாளம் காண இஸ்ரேலிய தடயவியல் மருத்துவர்கள் மரபணு அறிக்கையைக் கோரியிருந்ததனர். அவரது உறவினர்கள் காணொலி தொழில்நுட்பம் மூலம் உடலை அடையாளம் காட்டினர்.



இஸ்ரேலில் அவரது உடலுக்கு மதச் சடங்குகள் செய்யப்பட்டு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அனுலாவின் பராமரிப்பில் இருந்த பெண்ணும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார்.

“பார்வை இல்லாத எனக்கு அனுலா கண்ணாக” மாறியிருந்தார் என அந்தப் பெண் கூறியிருந்தார்.

அனுலா இஸ்ரேல் தேசத்துக்காக தன் உயிரைத் தியாகம் செய்துள்ளார். அவரது பொறுப்பில் இருந்த பெண்ணின் உயிரைக் காப்பாற்றியிருந்தார்.

தனது பராமரிப்பில் இருந்த பெண்ணை படுக்கையில் படுக்கவைத்துவிட்டு, என்ன நடந்தது என்று பார்க்க வெளியே வந்தபோது, குண்டு துளைத்து அனுலா உயிரிழந்தார்.

இந்நிலையில், இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்தின் தலையீட்டில் அனுலா ஜயதிலகவின் உடல் இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு உடல் கொண்டுவரப்பட்டது.

பின்னர் பிரேத பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று அவரது சடலம் திறக்கப்படாமல் அவரது வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

இருநாட்டு தேசியக் கொடிகளும் சவப் பெட்டியில் போர்த்தப்பட்டிருந்தன.

இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் சமயச் சடங்குகளின் பின்னர் களனி வேவல்துவ பொது மயானத்தில் அனுலாவின் பூதவுடல் அடக்கம் செய்யப்படும் என குடும்பத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இஸ்ரேல் – ஹமாஸ் இடையில் நீடித்துள்ள போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒன்பதாயிரத்தை கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

# அரிசி விலைக்குக் கட்டுப்படாவிட்டால் இறக்குமதிக்கு ஒழுங்குகள் செய்வோம்

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ எச்சரிக்கை



நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் விலையை கட்டுப்படுத்த முடியாது போனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சந்தையில் அரிசியின் விலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. நெல் விலை உயர்வினால் அரிசியின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துவரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

விலைக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்போது அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டால் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் விற்பனை செய்கின்றனர். இதை நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

எதிர்காலத்தில் மாவட்டந்தோறும் சென்று நிச்சயமாக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வோம். தொடர்ந்தும் விலையை கட்டுப்படுத்த முடியாது போனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்றார்.

# மானை வேட்டையாடியவர் இறைச்சியுடன் சிக்கினார்

## புத்தளம் பகுதியில் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – தப்போவை பாதுகாக்கப்பட்ட வனத்தில் மான் ஒன்றை வேட்டையாடி இறைச்சியாக்கிய சந்தேக நபர் ஒருவரை புத்தளம் கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தின் பிரதானி வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் ரணசிங்க தலைமையிலான அதிகாரிகள் குழு மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடமிருந்து ஒரு தொகை மான் இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மிருகங்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்த மானை வேட்டையாடியுள்ள சந்தேக நபர், வேட்டையாடிய மானை இறைச்சியாக்கி விற்பனை செய்வதற்கு முயற்சி செய்த போது கைது செய்யப்பட்டுள்ளார் என கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.









# பிரித் ஓதும் சர்ச்சையினால் களேபரம் பிக்கு, 2 பொலிஸார் ஆஸ்பத்திரியில்!

## ரஜமஹா விகாரையின் விகாரதிபதி கைது





(அப்துல்சலாம் யாசீம்)

அநுராதபுரம் – கெப்பித்திகொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கெப்பித்திகொல்லாவ குறுலுகம கிராமத்தில் பாம்பு கடிக்கு உள்ளான நிலையில் உயிரிழந்தவரின் வீட்டுக்கு ஏழாம் தினமான நேற்று முன்தினம் வாகல்கட பிரதேசத்தில் இருந்து பௌத்த பிக்கு ஒருவர் பிரித் ஓதுவதற்காக வருகை தந்துள்ளார்.

இந்நிலையில் அதே கிராமத்தில் வசித்து வரும் விகாரையின் விகாராதிபதி மற்றும் கிராம மக்கள் சிலர் அந்த பௌத்த பிக்குவின் வருகைக்கு எதிர்ப்பை வெளியிட்டு பிரித் ஓதும் வீட்டை முற்றுகையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடைத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றனர். பௌத்த பிக்குவை அனுப்பி வைக்க முற்பட்ட போது ஒரு குழு பொலிஸாரைத் தாக்கியத்துடன் அவர்களின் கடமைக்கும்இடையூறும்விளைவுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறுலுகம ரஜமஹா விகாரையின் விகாரதிபதியான (30வயது) ரஞ்சுனலாகே சுகத வன்ச ஹிமியை கைது செய்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் இரண்டு பொலிசார் மற்றும் பௌத்த பிக்கு ஒருவரும் காயம் அடைந்த நிலையில் கெப்பித்திகொல்லாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாங்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனக் கெப்பித்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணம் பண்ணையில் கடலுக்குள் பாய்ந்த ஓட்டோ

## மூன்று பெண்கள், ஒரு குழந்தை காயம்





யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வேகமாகபயணித்தஓட்டோஒன்றுவீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்தது.

நேற்று மதியம் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஓட்டோவே வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்தது.

ஓட்டோவில் சாரதி உட்பட ஐவர் பயணித்த நிலையில் நான்கு பேர் காயமடைந்தனர்.

மூன்று பெண்களும் ஒரு குழந்தையும் இதனால் காயமடைந்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முக்கிய பிரமுகர்கள் சிலர் கொழும்புக்கு வர இருக்கின்றமை பிரதான விடயமாக இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

இந்திய வம்சாவளி மக்கள் மலையகத்துக்கு வந்து குடியேறி 200 ஆண்டுகள்பூர்த்தியானமையை ஒட்டி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுக்கும் நிகழ்வு வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறுகின்றது.

அதில் பங்குபற்றுவதற்கு இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு அவரின் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையும் அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

அதேசமயம் தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகியவற்றுக்கும் இ.தொ.கா. அழைப்பு விடுத்திருக்கின்றது என்று தெரிகின்றது.

தமிழக அரசின் ஆளும் தி.மு.க. தரப்பில் சிரேஷ்ட அமைச்சரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான துரை முருகன் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இ.தொ.கா. இந்த நிகழ்ச்சிக்குத் தமிழக மாநிலக் கட்சிகளையும் அழைத்திருப்பதால் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் அதன் மாநிலத் தலைவர் அண்ணாமலை மட்டுமே போகட்டுமே, இந்திய தேசிய மட்டத் தலைவரான நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் எதற்கு என்ற கேள்வி பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமை வட்டத்தில் நிலவுவதாகவும் தெரிகிறது.

இந்திய அரசுத் தலைமையின் உள்வீட்டு உயர் மட்டம் என்று கருதப்படும் புதுடில்லி அதிகார பீடத்தில் – பிரதமர் மோடி தலைமையிலான ஐவர் குழுவில் – நிர்மலா சீதாராமன் ஒருவர். இந்திய அரசியலில் செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட வலிமை மிக்க பெண்மணி.

அவர் வியாழன், வெள்ளி இலங்கை வருவாராயின் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் பயணிக்கக் கூடும் என்று ஒரு வட்டாரம் தகவல் வெளியிட்டது.

இம்மாதம் இரண்டாம் வாரத்தில் இந்து சமுத்திரக் கரையோர நாடுகளின் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகக் கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் திருகோணமலைக்கும் செல்லவிருந்தார். அங்கு இந்தியா ஓவர்சீஸ் வங்கியின் கிளை ஒன்றை அவர் திறப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. எனினும் இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தத்தை அடுத்து ஏற்பட்ட இராஜதந்திர நெருக்கடிச் சூழலில் அவர் தமது இலங்கை விஜயத்தைக் கொழும்புடன் சுருக்கிக் கொண்டு புதுடெல்லி திரும்பினார். அதனால் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் திருகோணமலைக் கிளையின் தொடக்க விழா நடைபெறவில்லை.

அதேசமயம் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கி, பின்னர் மூடப்பட்ட ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியாவின் கிளை ஒன்றை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் திறப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன எனக் கூறப்பட்டது.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இலங்கை வந்தால், இந்த இரண்டு இந்திய வங்கிகளின் கிளைகளையும் அவரே நேரில் பிரசன்னமாகித் திறந்து வைக்கக் கூடும் என்று உள்வீட்டுத் தகவல்கள் கிடைத்தன.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஊழலுக்கு எதிரான தமது 'என் மண் என் மக்கள்' நடைப்பயணத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார். நாளை அதை முடித்துக் கொண்டு அடுத்த நாள் அவர் கொழும்பு புறப்படுவார் எனத் தெரிகின்றது. போகும் இடமெல்லாம் அரசியல் அதிர்வேட்டுக்களைக் கொளுத்தி போடும் 'ஃபயர் பிராண்ட்' தலைவர் அவர். இப்போது தமிழக மீனவர்கள் மீதான கடுமையான நடவடிக்கை, சீனக் கப்பலின் வருகை என்று இந்தியா கொதித்துப் போய் இருக்கும் நிலையில் இங்கு அண்ணாமலையின் அதிர்வேட்டுகள் எப்படி அமையப் போகின்றன என்று தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

## யாழில் தலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
காலை5மணியளவில்தலையில்விறைப்பு ஏற்பட்டதையடுத்து மயங்கியுள்ளார்.

இதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். இதையடுத்து இடம்பெற்ற பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## சட்டவிரோத நடவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு ஆதரவளிக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கில் மோதல்களுக்கு மத்தியில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும்போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் மேலும் கூறுகையில்,

"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவர் அமோக வாக்குகளால் வெற்றியடைவார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல எதிரணியில் உள்ள ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பார்கள்." – என்றார்.

## சம்பள உயர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அல்லது சம்பள அதிகரிப்பைக் கோரியே நாடளாவிய ரீதியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று அரச மற்றும் மாகாண அரச சேவை சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இன்று நண்பகல் 12 மணிக்கு இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தொழிற்சங்க சங்கத்தின் இணைப்பாளர் சந்தன சூரியஆராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி, அலுவலக சேவைகள் மற்றும் மாகாண அரச சேவைகள் எனப் பல சேவைகளின் சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதேவேளை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் அடுத்த வாரத்துக்குள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மக்கள்தான் முதலில் மாற வேண்டும்

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் - சிக்கலில் - மாட்டுப்பட்டிருக்கின்றது என்றால் அதற்கு பிரதான காரணம் தவறான அரச நிர்வாகம்தான்.

அதற்குள் ஊழல், மோசடி, லஞ்சம், பொறுப்புக் கூறல் இல்லாமை, அரச நிர்வாகத் தகுதி இல்லாதோரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தமை என்று பல அம்சங்கள் அடங்கும்.

இவையெல்லாம் திருத்தப்பட்டால்தான் - நிவர்த்தி செய்யப்பட்டால்தான் - நாடு பொருளாதார ரீதியில் மேம்படுவதற்கு வாய்ப்புக் கிட்டும்.

இல்லையேல் எவ்வளவுதான் முயன்றாலும், சாண் ஏற முழம் சறுக்கியமைப் போல நாட்டின் பொருளாதார நிலைமை சீரடையாமல் குன்றிச் செல்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

சரி, மேலே குறிப்பிட்ட ஊழல், மோசடி, லஞ்சம், பதவித் துஷ்பிரயோகம், பொறுப்பின்றிச் செயற்படல் போன்ற தவறான செயலாற்றுகையைப் பொது வாழ்வில் இருந்து நீக்கி, அரச நிர்வாகத்தை நீதி, நேர்மை, சிறந்த உத்தி மற்றும் தீர்க்கதரிசனப் பார்வையுடன் நடத்தக்கூடியதாக மாற்ற வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

அரசியல்வாதிகளை - மக்கள் பிரதிநிதிகளை - மாற்றுவதா? அல்லது அரச நிர்வாகிகளை மாற்றுவதா? அல்லது சட்ட விதிமுறைகளையும் தண்டனை முறைமைகளையும் மாற்றுவதா? இவை எல்லாவற்றையும் மாற்ற முன்னர் இன்னொரு தரப்பு முதலில் மாற வேண்டும்.

அது - நாட்டின் பொதுமக்கள் தரப்பு. நீதி, நியாயம், நேர்மையுடன் நாட்டை வழி நடத்தும் மக்கள் பிரதிநிதிகளை மட்டுமே தாங்கள் தெரிவு செய்வார்கள் என்று தங்களைப் பொதுமக்கள் மாற்றிக் கொள்வார்களானால் இந்தப் பிரச்சினைக்கு இலகுவான தீர்வு கிடைத்துவிடும்.

லஞ்சம், ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம், அரச சொத்துக்களைச் சூறையாடுதல் போன்ற தகிடுதத்தங்களைப் புரியும் அரசியல் தலைமைகளை மாற்ற வேண்டும் என்றால், முதலில் மக்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இத்தகைய சீர்கெட்ட அரசியல்வாதிகளை மாறி மாறித் தெரிவு செய்கின்ற தங்களின் பொறுப்பற்ற செயற்போக்கை முதலில் மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

வெளிச்சத்துக்கு வந்திருக்கும் அரசியல்வாதிகளின் சீத்துவம் பொதுமக்களுக்குத் தெரியாததல்ல. விவரமாகத் தெரியும். அப்படி இருந்தும் பொறுப்பின்றி, மாறி மாறி அவர்களையே தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதன் மூலம் தங்கள் தலையிலேயே தாங்களே மண்வாரிக் கொட்டிக் கொண்டிருக்கின்றனர் இலங்கை நாட்டு மக்கள்.

மக்கள் திருந்தாதவரை நமது அரசியல் செயல்முறையோ, அரசியல்வாதிகளோ, ஊழல் நிர்வாகங்களோ மாறப்போவதில்லை.

## ஹப்புத்தளையில் மண்சரிவு



தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக ஹப்புத்தளை பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக ஹப்புத்தளை நிர்வாக கிராம அதிகாரி ஜகத் லியனகே தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்தில் வசிக்கும் 5 குடும்பங்கள் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டு, உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தினால் ஓர் ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த இடத்தை ஆய்வு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் வேகமாக பரவி வரும் கண் நோய்!

### பாதுகாத்துக் கொள்ள மக்களுக்கு வழிகாட்டல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் கண் நோய் மிகவும் விரைவாக பரவி வருவதால் கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் கேட்டுள்ளார்.

கல்முனை பிராந்தியத்தில் தற்போது பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு கண் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கண் நோயினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களை பெற்றோர் பாடசாலைக்கு அல்லது தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்புவதையும் பொதுமக்கள் கூடும் இடங்களில் சஞ்சரிப்பதனையும் தவிர்த்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

கண் நோய் தொடர்பாக பிரதேசங்களிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் ஊடாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொற்று நோயாளிகளும், பொது மக்களும் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக வெளியிடங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும், தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் வைத்திய ஆலோசனைகளைப் பெற்று அதற்கான சிகிச்சையையும் பெற்றுக் கொள்ளுமாறும் பணிப்பாளர் மேலும் கேட்டுள்ளார்.

கண் சிவத்தல், பார்வை மங்கல், கண்ணில் நீர் வழி

# கேரளவில் மதவழிபாட்டில் குண்டுவெடிப்பு: இன்று அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு அழைப்பு



கேரள மாநிலம் களமச்சேரியில் மத வழிபாட்டு கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இன்று திங்கள்கிழமை அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்கு மாநில முதல்வர் பினராயி விஜயன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மாநில சட்டப்பேரவையில் உள்ள முதல்வர் கருத்தரங்கு அறையில் நடைபெறும் என்று முதல்வர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே உள்ள களமசேரியில் நேற்று ஞாயிறு தோறும் நடக்கும் கிறிஸ்தவ மத சிறப்பு ஜெபக் கூட்டம் நடைபெற்றது. இதில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு வழிபாடு நடத்தினர்.

இந்த நிலையில் காலை 9 மணி யளவில் இந்த கூட்டத்தில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் ஏற்பட்டன.

இதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 45 இற்கும் மேற்பட்டோர் படுகாயங்க ளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என கூறப் படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து கேரள முதல்வர் பினராயி விஜயனிடம் உள்துறை அமைச்சர் அமித்ஷா தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் கேட்டறிந்துள்ளார். மேலும் மத்திய அரசு அனைத்து உதவிகளை யும் செய்யத் தயாராக இருக்கிறது என உறுதி அளித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து பேசிய கேரள முதல்வர் பினராயி விஜயன், இது மிகவும் துரதிருஷ்டவசமான சம்பவம். இது தொடர்பான விவரங்களை சேகரித்து வருகிறோம். அனைத்து உயர் அதிகாரிகளும் எர்ணாகுளத்தில் குவிந்துள்ளனர். சம்பவம் குறித்து டிஜிபியிடம் பேசியிருக்கிறேன். விசார ணைக்குப் பின்னர் கூடுதல் விவரங்கள் தெரிய வரும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இன்று கேரளாவில் அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு பினராயி விஜயன் அழைப்பு விடுத்துள்ளார். இதற்காக டில்லியில் இருந்த முதல்வர் நேற்று கேரளா திரும்பினார்.

இதேவேளை, இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு பொறுப்பேற்று டொமினிக் மார்டின் என்பவர் சரண் அடைந்துள்ளார்.

பொலிஸார் அவர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள் ளனர்.

இது தொடர்பில் கேரள மாநில சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. அஜித்குமார் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், களமசேரி குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு பொறுப்பேற்று திரிசூரில் உள்ள கொடகரா பொலிஸ் நிலையத்தில் ஒருவர் சரண் அடைந்துள்ளார். அவரது பெயர் டொமினிக் மார்டின். குண்டுவெடிப்பு நிகழ்ந்த மதவழிபாட்டுத் தலத்தின் சபையை சேர்ந்தவர்தான் நான் என்று சரண் அடைந்துள்ள டொமினிக் மார்டின் கூறியுள்ளார். அதுகுறித்து பொலிஸார் விசாரித்து வருகிறது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் அனைத்து கோணங்களிலும் விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த குண்டுவெடிப்பு மத வழிபாட்டுத் தலத்தின் மையப்பகுதியில் நிகழ்ந்துள் ளது. இதில், ஒருவர் உயிரிழந்துள்ளார். கிட்டத்தட்ட 45 பேர் காயமடைந்துள்ளனர். 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இந்த குண்டுவெடிப்பில் ஏற்பட்ட தீ காயங்களால்தான் பெண் பலியாகி உள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. மத்திய புலனாய்வு அமைப்புகளுடன் சேர்ந்து பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஊடகவியலாளர்களை சந்தித்தகேரளசுகாதாரத்துறைஅமைச்சர் வீணா ஜார்ஜ், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 10 பேரின் உடல் நிலை நன்றாக உள்ளது. அவர்கள் விரைவில் வீடு திரும்புவார்கள். மருத்துவமனையில் சிகிச்சைப் பெறு பவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக் கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தச் சம்பவம் குறித்து மாநில முதல்வர் ஆரிஃப் முகம்மது கான் கூறுகையில்,

களமசேரியில் மத வழிபாட்டுக்கூட் டத்தில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் இறந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மிகவும் வேதனை அடைந்தேன். உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனைகள் என்று தெரிவித்துள்ளார்.

# ஆந்திராவில் ரயில் விபத்து: 6 பேர் பலி!

ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டம் கண்டகப்பள்ளியில் பயணிகள் ரயில் மீது கடுகதி ரயில் மோதிய விபத்தில் சுமார் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளனர். விபத்து நிகழ்ந்த இடத்தில் மீட்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விசாகப்பட்டினத்தில் இருந்து ராயகடா சென்ற பயணிகள் ரயில் மீது விசாகப்பட்டினத்தில் இருந்து பலாசா சென்ற ரயில் மோதிய காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.



இதில் மூன்று ரயில் பெட்டிகள் தடம்புரண்டுள்ளன. நேற்று மாலை 7 மணியளவில் இந்த விபத்து நடை பெற்றது.

விபத்து நடைபெற்ற இடத்தில் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. விஜயநகர மாவட்ட நிர்வாகம், தேசிய மீட்பு படையினர் மற்றும் ரயில்வே ஊழியர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், காயமடைந்தவர்கள் அருகாமையில் உள்ள மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என விஜயநகரம் மாவட்ட ஆட்சியர் எஸ். நாகலட்சுமி தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் போர் விமான தாக்குதலில் ஹமாஸின் வான் படை தளபதி பலி!



இஸ்ரேல் போர் விமான தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் வான் படை தளபதி அசம் அபு ரகபா கொல்லப்பட்டுள்ளார்.

ஹமாஸின் வான் படை பிரிவு தலைமை தளபதியாக அசம் அபு ரகபா செயல்பட்டு வந்தார்.

அந்த அமைப்பின் பீரங்கி தகர்ப்பு ஏவுகணைகள், ட்ரோன்கள், பாராகிளைடர்கள், வான்வழி கண்காணிப்பு ஆகிய பிரிவுகள் அசம் தலைமையின் கீழ் செயல்பட்டு வந்தன. கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் நகரங்கள் மீது பாராகிளைடர்கள், ட்ரோன்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அசம் அபு ரகபா மூளையாக செயல்பட்டார்.

இஸ்ரேல் உளவு அமைப்பான ஷின் பெட்டை சேர்ந்த உளவாளிகள், காசா பகுதியில் அவரை மிக தீவிரமாக தேடி வந்தனர். நீண்ட தேடுதலுக்குப் பின்னர் வடக்கு காசாவின் இரகசிய சுரங்கப் பாதையில் அசம் பதுங்கியிருக்கிறார் என கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இடத்தை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் கடந்த வெள்ளிக் கிழமை தாக்குதல் நடத்தின. இதில் ஹமாஸின் வான் படை பிரிவு தலைமை தளபதி அசம் அபு ரகபா உட்பட ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

மேலும் ஹமாஸின் 150 சுரங்கப் பாதைகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அதிதீவிர தாக்குதல்களை நடத்தின. இதில் காசா பகுதியின் தொலைத்தொடர்பு கட்டமைப்புகள் முழுமையாக தகர்க்கப்பட்டன.

இதுதொடர்பாக ஐ.நா. உலக உணவு திட்ட அமைப்பின் தலைவர் சிண்டி மெக்கைன் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் தொலைத்தொடர்பு, இணைய சேவை முற்றிலுமாக முடங்கியிருக்கிறது. அங்கு பணியாற்றும் எங்களது ஊழியர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. காசாவில் பணியாற்றும் ஐ.நா. ஊழியர்கள், தன்னார்வலர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருக்கிறது என்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறும்போது, வடக்கு காசா பகுதியில் முதல்கட்ட தரைவழி தாக்குதலை தொடங்கிவிட்டோம். வடக்கு காசாவில் வசிக்கும் மக்கள் உடனடியாக தெற்கு காசாவுக்கு செல்லுமாறு அறிவுறுத்துகிறோம்.

அடுத்த சில நாட்களில் வடக்கு காசாவில் தரை, கடல், வான் வழியாக மிகப்பெரிய தாக்குதல்கள் நடத்தப்படும். ஹமாஸ் தீவிரவாதிகள் கொரில்லா பாணியில் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நாங்களும் அதே பாணியில் தாக்குதல் நடத்தி வருகிறோம் என்று தெரிவித்தன.

இதுகுறித்து எகிப்து ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் அகமது கூறும்போது, காசா போர், அதன் பின்விளைவுகள், உயிரிழப்புகள் குறித்து இந்திய பிரதமர் மோடியும் எகிப்து ஜனாதிபதியும் விவாதித்தனர்.

காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இரு தலைவர்களும் வலியுறுத்தினர். இந்தியா, எகிப்து இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

# ஹமாஸ் படையினரின் பதுங்கு குழிகளை இஸ்ரேலிய இராணுவம் அழித்துள்ளது!

ஹமாஸ் படையினரின் பதுங்கு குழிகளை இஸ்ரேலிய இராணுவம் அழித்துள்ளது என இஸ்ரேல் பாதுகாப்பு துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் துல்லியமான தாக்குதல் நடத்தி ஹமாஸ் படையினரின் 150 பதுங்கு குழிகளை அழித்துள்ளது.

அத்துடன், இந்த துல்லிய தாக்குதலின் போது ஹமாஸ் அமைப்பினரின் வீரர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் எதிரிகளின் பதுங்கு குழிகள், சுரங்கங்கள், ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் படைகள் இடையே 22 நாட்களாக போர் தாக்குதல் நடைபெற்று வருகிறது.

இஸ்ரேலிய இராணுவ படை பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் தரைவழி தாக்குதலை தொடங்கியுள்ளது.



இதனால் பாலஸ்தீனத்தின் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஹமாஸ் உடனான போரானது கடினமானது மற்றும் நீண்ட காலம் நீடிக்க கூடியது என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சமீபத்தில் அறிவித்துள்ளார்.

# மன்னாரில் கைதான 23 இந்திய மீனவரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில்!






(மன்னார் நிருபர்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து வரப்பட்ட நிலையில் தலைமன்னார் கடற்படை முகாமில் மலேரியா பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 23 இந்திய மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் நேற்று மாலையில் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதிவான் இந்த மீனவர்களை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# நெடுந்தீவில் கைதான 14 தமிழக மீனவருக்கும் நவம்பர் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில்!

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரையும் நவம்பர் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.



நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு படகுடன் அதிலிருந்த 14 மீனவர்களையும் கைது செய்திருந்தனர்.



கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி அழைத்து வந்த கடற்படையினர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மீனவர்களை நவம்பர் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவுப் பணிகள் நேற்று ஆரம்பம்

தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தொடர்ச்சியாகத் தாயக விடுதலைக்காக தனது மூன்று பிள்ளைகளை வித்தாக்கிய சண்முகலிங்கம் பொதுச்சு டரேற்றி வைக்க நிகழ்வுகள் ஆரம்பிக்கபட்டு துப்பரவு பணிகள் தொடர்ந்தன.

வழமை போல் இவ்வருடமும் மாவீரர் தின நிகழ்வுகள் தீவக நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிக்க விசேட குழு



வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் தேவை, வீதிகளிலுள்ள இடவசதி, எரிபொருளுக்கான செலவு மற்றும் வாகன இறக்குமதிக்கான தொகை ஆகியன தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



# மத்திய மலைநாட்டில் கனத்த மழை

- தி.பெருமாள் -

நேற்று மாலை வேளையில் மத்திய மலைநாட்டில் இடி மின்னல் மற்றும் கனத்த மழையுடன் கூடிய காலநிலை தோன்றியுள்ளது.

இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

அத்தோடு மலையக பகுதிகளில் விவசாய செய்கையில் ஈடுபட்டு உள்ள விவசாயிகள் மற்றும் பாற்பண்ணையாளர்கள் பாரிய அளவிலான சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இத்துடன் நீர் ஏந்தும் பகுதியில் உள்ள மவுசாகல, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, நவலக்சபான, விமலசுரேந்திர, கலுகல, பொல்பிட்டிய, ஆகிய நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

ஏ7 வீதியில் கினிகத்தேன முதல் நுவரெலியா வரையும் மற்றும் தியகல, நோட்டன், மஸ்கெலியா பிரதான வீதியில் அதிகளவில் பனி மூட்டம் காரணமாக வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு ஹட்டன் வலயப் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட வேண்டு கோள் விடுத்துள்ளார்கள்.



# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் கைது

மஸ்கெலியா – பெயார்லோன் தோட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் பகல் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மஸ்கெலியாவைச் சேர்ந்த 50 வயதான சந்தேக நபர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார். அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கப்பம் கோரிய மூவர் கைது



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவிடம் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று சந்தேகநபர்களும் ரம்புக்கனையில் வைத்து நேற்றுக் காலை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மிடம் 15 லட்சம் ரூபாவை சில தரப்பினர் கப்பமாக கோரியுள்ளனர் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து இந்த சந்தேகநபர்கள் மூவரும் கைதாகியுள்ளனர்.

# இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட களை, பூச்சி கொல்லிகள் சிக்கின!

## ஒரு கோடி ரூபா பெறுமதியானவையாம்

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட – தடைசெய்யப்பட்ட – களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை கடற்படையினர் கைப்பற்றியமையோடு, கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 2 மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்பிட்டி விஜய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக மீன்பிடிக் கப்பலொன்றின் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தத்தடைசெய்யப்பட்ட களைக்கொல்லிகளும் பூச்சிக்கொல்லிகளும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுபவை எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 22 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# பூசா சிறைச்சாலையிலிருந்து கைபேசிகள் மீட்கப்பட்டன!

பூசா சிறைச்சாலையின் பழைய கட்டட வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

"ஏ" மற்றும் "பி" பிரிவுகளில் 2 கையடக்கத் தொலைபேசிகள் "சிம்" அட்டைகளுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை தவிர, 2 சிம் அட்டைகள் மற்றும் வெளிப்புற உறை அகற்றப்பட்ட 2 சார்ஜர்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# ஆஸி சுரங்க நிறுவனம் தன் பங்காளிகள் மூலம் மன்னார் மக்களின் காணிகளைச் சுருட்டுகிறது!

## மன்னார் தீவை அழிக்கும் நில விற்பனை இடம்பெறுவதாக பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

(மன்னார் நிருபர்)

மன்னார் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனம் ஒன்று, அதன் உள்ளூர் பங்காளிகள் மூலம், மன்னார் தீவின் கரையோரப் பகுதியில் – பொய்யான சாக்குப் போக்குகளின் கீழ் – நிலத்தை வாங்குகிறது என மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதி ஜேம்ஸ் ஜேசுதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். அப்போதே அவர்கள் மேற்படி விடயத்தைத் தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மன்னாரின் மின்சார தேவைக்காக சோலார் பனல்களை நிறுவுவதாக கூறி, குறைந்த விலையில் குடியிருப்பாளர்களின் காணிகளை நன்கு அறியப்பட்ட உள்ளூர்வாசிகள் வாங்குகின்றனர்.

எவ்வாறாயினும், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனமான டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட்டிற்கு தாது மணல் அகழ்வுக்காக விற்பதே உண்மையான காரணம்.

சுரங்கத் தொழில் தொடங்கினால், வரலாற்று மற்றும் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் தீவின் அழிவை இது உணர்த்தும் என்பதை உள்ளூர்வாசிகள் உணர்ந்து வருகின்றனர்.



40 அடி வரையிலான சுரங்கங்கள் கணிசமான கடல் நீர் ஊடுருவி நிலத்தடி நீரை மாசுபடுத்தும். இது மக்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் விவசாயத் திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் மன்னாரின் கரையோர பகுதிகளில் அகழ்வாராய்ச்சி செய்ய விரும்பவில்லை என ஆஸ்திரேலிய பங்குச் சந்தைக்கு பகிரங்கமாக அறிவித்தது.

இப்படி இருந்தால், இந்தப் பகுதிகளில் ஏன் நிலம் வாங்குகிறார்கள்? இலங்கையின் சட்டங்களில் அண்மைய மாற்றங்கள் காணி உரிமையாளர்கள் தங்களுடைய சொந்த சொத்துக்களில் அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதிப்பதும், இதற்கு முன்னர் ஆய்வு உரிமம் உள்ளவர்கள் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த ஆண்டு டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் தாது மணல் ஆய்வில் ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றது. பின்னர் சுரங்க விண்ணப்பத்தை சமர்ப்பிக்க சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அழைக்கப்பட்டது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் முன்னர் இதே ஆய்வு உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவின் டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் சுரங்க நிறுவனம் மற்றும் அவற்றின் உள்ளூர் துணை நிறுவனங்களான கில்சித் எக்ஸ்ப்ளோரேஷன், ஹேமர்ஸ்மித் சிலோன், சுப்ரீம் சொல்யூஷன், சனுர் மினரல்ஸ், ஓரியன் மினரல்ஸ் ஆகியவற்றின் பொய்கள் மற்றும் ஊழல்களின் நீண்ட பட்டியலில் 'சோலார் பனல்'. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2023




கடின முயற்சிகளின் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் செயல்களில் வளர்ச்சி பெற விரும்பினால் மனதை ஒருமுகப்படுத்தி செயலாற்ற வேண்டும்.

மனச்சோர்வு ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகலாம். உங்கள் கீழ்பணிபுரிவோ ரிடம் நல்ல முறையில் பழகுங்கள்.

உறவில் வரும் பிரச்சினைகளை நல்ல முறையில் கையாள அமைதியாக இருந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்படுதலை தடுத்தால் நீங்கள் நல்ல முறையில் உணர்வீர்கள்.

வரவும் செலவும் இணைந்தே காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் கவலையை அளிக்கும்.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறுகளால் அவதிப்பட நேரிடலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்க ளின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல்திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

தொழிலில் ஏற்ற இறக்கங்கள் காணப் படும். பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் நேர்மை உங்களுக்கு வெகுமதியை பெற்றுத் தரும்.

தொடர்பாடலில் ஏற்படும் குறைபாடுகள் உறவில் நல்லிணக்கத்தை தடுக்கும். உறவை வலுப்படுத்த குடும்பத்துடன் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

நிதியைப் பொறுத்தவரை நல்ல நேரத்திற்காக காத் திருக்க வேண்டும். செலவு செய்வதைவிட சேமிப்பது நல்லது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பல்வலி, கண்கள் மற்றும் கால்களில் வலி ஏற்படலாம். யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




நீங்கள் செய்யும் செயல்களின் விளைவுகள் உங்களுக்கு அனுகூல மாக இருக்க நீங்கள் விரைந்து செய லாற்ற வேண்டும். உங்களிடம் இருக் கும் புத்திசாலித்தனத்தின் மூலம் எதை செய்யலாம் எதை செய்யக் கூடாது என்று உணர முடியும்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதட்டம் காணப்படும். சக பணியாளர் களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங் கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை யும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் நன்மை தரும்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.




உங்கள் வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள். இன்று பயணங் கள் அதிகம் காணப்படும். அது உங்க ளுக்கு பயனளிக்கும்.

பணிச்சூழல் இன்று சிறப்பாக காணப் படும். நீங்கள் ஆற்றும் பணிக்காக நற் பெயரை எடுப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஒவ்வொரு மணித்துளிகளையும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று பணத்தை சேமிக்கவும் நிதிநிலையை மேம் படுத்தவும் உகந்த நாள். பணியின் மூலம் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் காணப்படும். சிறந்த முறையில் திட்டமிட அமைதியாக செயலாற்றுங்கள்.

மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக் கும். சகபணியாளர்கள் உங்களை பாராட்டுவார்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். பெரிய வர்களுடனான உறவில் நல்ல ஒத்துழைப்பு பராமரிக் கப்படும்.

நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும். உங் கள் பணவரவை மேம்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று மகிழ்ச்சியாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படும்.




இசை கேட்பதும் திரைப்படங்க ளைப் பார்ப்பதும் உங்களை நிதானப் படுத்தும். உங்கள் செயல்களில் நீங் கள் பொறுமையாக இருக்க வேண் டும்.

பணிவளர்ச்சி மந்தமாக இருக்கும். மேலதிகாரியிடம் உங்கள் மதிப்பை நிரூபிக்க கடினமாக உழைக்க வேண்டும். இன்று ஓய்வின்றி வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியவர்களுடன் உறவாடும் போது கவனமாக இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர்களிடம் நட்பாக இருக்க வேண்டும்.

நிதிநிலையில் முன்னேற்றம் குறைந்து காணப்ப டும். இன்று பணம் செலவு செய்வதை தடுப்பது நல்லது.

சூடு சம்பந்தமான பிரச்சினைகளில் முன்னெச்சரிக் கையாக இருக்கவும். தலைவலி ஏற்படலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல்திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண் டும்.

வேலையில் பதட்டம் காணப்படும். உங்கள் கடமை களை சரியான முறையில் செய்வதற்கு மிகவும் கவன மாக பணிகளைக் கையாள வேண்டும்.

குடும்ப உறவில் ஒற்றுமை குறைந்து காணப்படும். சிறிய அளவில் அனுசரித்துப் போவதன் மூலம் சம நிலையை பராமரிக்கலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமெ னில் பதட்டத்தை கைவிடுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய தினத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித் துக் கொடுக்க வேண்டும் என்ற பதட்டம் காணப்படும். சகபணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயன ளிக்கும்.

உறவுமுறையைப் பொறுத்தவரை செயல்பாடுகள் காணப்படாது. பரஸ்பர நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரித்துப் போவது மிகவும் முக்கியம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். நிதிநிலையைப் பாதுகாக்க திட்டமிடல் அவசியம்.

மனஅழுத்தமும் பதட்டமும் செரிமானக் கோளாறு களை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2023




உறவுகளில் சிக்கல் வராமல் இருப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். புதிய உறவுகள் ஏற்பட சாத்தியம் உள்ளது. மிகுந்த பொறுமை அவசியம்.

சிறந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணியை எளிதாக முடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

பொதுவாக நல்ல உறவுமுறை காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி நன்கு காணப்படும். ஆன்மீக காரியங்களுக்காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




ஒரு துடிப்பான நாள் உங்கள் முன் இருக்கிறது. உங்கள் சுய வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளும் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்

சேவை சார்ந்த ஈடுபாடு காரணமாக பணி மற்றும் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேரா வண்ணம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சாதகமான உறவிற்கு இந்த நாள் ஏற்றதாக இல்லை. உங்கள் நேர்மறையான அணுகுமுறை குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை கொண்டு வரும்.

செலவினங்கள் அதிகமாகக் காணப்படும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும். எதிர்காலத்திற்காக சிறிது சேமிக்கவும்.

இன்று பதட்டம் காணப்படும்.




வெளியிடங்களுக்குச் செல்வது சிறப்பான உணர்வைத் தரும். உங்கள் செயல்களில் உணர்ச்சிப்பூர்வமாக இருப்பதைவிட யதார்த்தமாக இருப்பது அவசியம். இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக கவனக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உறவில் நட்பான அணுகுமுறையைக் கையாள்வது உங்களுக்கு நல்லது.

நீங்கள் எதிர்பார்த்த அளவிற்கு நிதிவளர்ச்சி இருக்காது. ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் காணப்படுகின்னது.

பதட்டமும் பாதுகாப்பற்ற உணர்வும் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் நாள். உறுதியுடன் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

வேலையில்அதிகபொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும். உங்கள் வேலையில் இன்னும் கூடுதலாக ஈடுபட முயலுங்கள். உங்கள் ஆர்வத்தை அது மேம்படுத்தும்.

உறவில் நெறி முறைகளைப் பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தோர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

இன்றுநிதிநிலைமைநன்றாகஉள்ளது.பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நிலையான ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தைரியம் உங்களை நலமாக வைத்திருக்கும்.








# மடக்கிய இங்கிலாந்தை சுருட்டி வென்றது இந்தியா

இந்திய அணியை குறுகிய ஓட்டங்களுக்குள் மடக்கிய இங்கிலாந்தை, சுருட்டி வென்றது இந்திய அணி.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் லக்னோவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனான இந்திய அணி, நடப்பு சம்பியன் இங்கிலாந்துடன் மோதியது.

இந்தப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி அந்த அணியின் தொடக்க வீரர்களாக ரோஹித் சர்மா- சுப்மன் கில் ஆகியோர் களமிறங்கினர்.

சுப்மன் கில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த விராட் கோஹ்லி ஓட்டம் எதுவும் அடிக்காமல் “டக் அவுட்”டாகியும் ஷ்ரேயாஸ் அய்யர் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்தியா 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

ஒரு பக்கம் விக்கெட்டுகள் வீழ்ந்த போதிலும், மறுபக்கம் ரோஹித் சர்மா உறுதியாக நின்று விளையாடினார்.

அவருடன் கே.எல். ராகுல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தது.

கே.எல். ராகுல் 39 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். 80 ஓட்டங்களைக் கடந்து சிறப்பாக விளையாடிய ரோஹித் சர்மா சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 87 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜடேஜா 8 ஓட்டங்களுடனும், முகமது ஷமி ஓர் ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக விளையாடிய சூர்ய குமார் யாதவ், அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டு 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி, 50 ஓவர்களையும் முழுமையாக எதிர்கொண்டு 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 229 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 230 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

அந்த அணியில் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஜானி பேர்ஸ்டோ மற்றும் டேவிட் மலான் இருவரும் முறையே 14 மற்றும் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய ஜோ ரூட் மற்றும் பென் ஸ்டோக்ஸ் இருவரும் “டக் அவுட்”டாகினர்.

இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிந்தன.

அந்த அணி சார்பாக அதிகபட்சமாக லியாம் லிவிங்ஸ்டன் 27 ஓட்டங்களைச் சேர்த்தார்.

கடைசியில் இங்கிலாந்து அணி, 34.5 ஓவர்களில், 129 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதையடுத்து இந்திய அணி 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சமி 4 விக்கெட்டுகளையும் பும்ரா 3 விக்கெட்டுகளையும் யாதவ் 2 விக்கெட்டுகளையும் ஜடேயா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனான இந்தியாவின் ரோஹித் சர்மா தெரிவானார்.

இந்திய அணி இதுவரை எதிர்கொண்ட 6 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. எந்தவொரு தோல்வியையும் அடையவில்லை.

புள்ளிப்பட்டியலிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 6 | 6 | 0 | 0 | 0 | 12 | 1.405 |
| 02 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | 2.032 |
| 03 | நியூஸிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 1.232 |
| 04 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 05 | இலங்கை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.205 |
| 06 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.387 |
| 07 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.338 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |



# ஒலிம்பிக் கழகத்துடனான காட்சிப் போட்டியில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் வெற்றி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென்கிழக்கு பல்கலைக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட காட்சிப் போட்டியில் தென்கிழக்கு பல்கலைக் கழகம் வெற்றி பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு பல்கலைக் கழக விளையாட்டுத் திணைக்களம் காட்சிப் போட்டி ஒன்றை நடத்தியது.

இப்போட்டி தென்கிழக்கு பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில், மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட தென்கிழக்கு பல்கலைக் கழகம் 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.




# பாடசாலை மட்ட உயரம் பாய்தலில் தங்கம் வென்ற களுதாவளை மாணவன்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உயரம் பாய்தலில் களுதாவளை தேசிய பாடசாலை மாணவன் கே.பகீர்ஜன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில், மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட களுதாவளை தேசிய பாடசாலை மாணவன் கே.பகீர்ஜன், 1.69 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றார்.